கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

வசந்தகால இதழ்
NEWS BULLETIN
SPRING 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
01/05/2020 முதல்	கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால், நடாத்தப்பட்டு வருகின்ற தமிழ்மொழிக் கலைக்கழகத்தின் அனைத்துக் கற்பித்தல் செயற்பாடுகளும், உலகெங்கும் வேகமாகப் பரவி வரும் "கொரோணா" தொற்றிலிருந்து எல்லோரையும் பாதுகாக்கும் பொருட்டு, மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதும், எல்லா வகுப்புகளுக்குமான தமிழ்ப் பாட செய்முறைகள், நவீன தொழில்நுட்பமுறை மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தமது வீட்டிலிருந்தவாறே அனுப்பப்பட்டும், கற்பிக்கப்பட்டும் வருகின்றன.
21/06/2020	OFAAL செய்முறைப் பரீட்சை (Practical Exam)
04/07/2020	OFAAL எழுத்துப் பரீட்சை (Theory Exam)

உலக தொழிலாளர் தினம் மே 01

உழைத்து உழைத்துக் களைத்து, ஓடாய்த் தேய்ந்து கொண்டிருக்கும் அனைத்து உழைப்பாளர்களுக்கும் மே தின வாழ்த்துக்கள்!

முள்ளிவாய்க்கால் நினைவுநாள்!

வட்டுவாகலோடு வாழ்விழந்து போனது
வரலாற்றில் ஓரினம்!
வாழத்துடித்த மலர்கள் எல்லாம்
வண்ணமிழந்து போயினவே!
மொட்டுக்களாய் முளைத்து மலரமுன்
முளையிலேயே கருகினவே!
சிட்டாய்ப் பறந்த குருவிகள் எல்லாம்
சிறகொடிந்து வீழ்ந்தனவே!

காதலோடு வீரம் செறிந்த,
மோதலோடு மோகம் திளைத்த,
மூத்த இனமாய் உலகில் முளைத்த,
முத்தமிழின் சொத்து,
தித்திக்கும் தேன் தமிழைப் பேசும்,
எங்கள் தமிழினத்தின்
வேரறுக்கப்பட்ட நாள்!



வலி சுமக்கும் வடுக்கள்!

மரண வேதனை மனதில் ஓலமிட
கண்களிலோ கண்ணிவெடியின் காயங்கள்!
கலங்கிய காரிருள் பார்வையில்
காடையர்கள் வெறிகொண்டு விரட்டும் வக்ரம்!
பாய்ந்தடித்து ஓடும் நேரம் பதறிப் போனோம்!

வான் மழை போல்
கொட்டிய குண்டுகளால்,
தாயை இழந்தோம்!
தந்தையை இழந்தோம்!
தமக்கையை இழந்தோம்!
தமயனை இழந்தோம்!
தம்பியை இழந்தோம்!
தங்கையை இழந்தோம்!
தாரத்தையும் இழந்தோம்!
தனியாகவே தவித்தோம்!
வலிசுமந்த வடுக்களால்
வாடிவதங்கியே நிற்கின்றோம்
வாய்க்காலில் எங்கள் முள்ளிவாய்காலில்!

நேசிக்க யாருமே இல்லை என யோசித்தாலும்
வெற்றி கொள்ள வேகமாய் ஓடுகிறது
நேர் கொண்ட பாதை நோக்கி.
போகின்ற சாலை எங்கும்
எமது குஞ்சு குருமான்களின்
குருதி ஆறுகள்!
எத்தனை முறைதான் இறப்பது நாங்களும்.
இத்தனை வருடங்களாக
விளம்பரப்படுத்தவில்லை
எங்கள் வேதனைகளை.
உறவுகள் மீது போட்ட குண்டுத் தாக்குதலில்
இவ்வளவுதானா என்றது வாழ்க்கை!

இருள் சூழ்ந்து இமை மூடும் போது கூட,
எண்ணங்களில் எல்லாம் ஓலம் போடும் சத்தம்!
நினைவுகள் எல்லாம் நெஞ்சைப் பிளக்கின்றன!
எங்கு பார்த்தாலும் சுடுகாடு போலக்
காட்சியளிக்கும் பிணங்கள்!
ஆண்டுகள் பதினொன்று ஆனாலும்
ஆடுகின்றதே இப்போதும் இரத்தமும் சதையும்.
வர வேண்டாம் வாழ்க்கையில் இப்படி ஒரு வரம்

ஆழிப்பேரலையில்
சிக்கிச் சின்னாபின்னமானதில்,
சிந்திக்கவே நேரமில்லாமல் சிதறிய நாங்கள்
சிறுகச் சிறுக முன்னேறிய
எண்ணங்களின் வெற்றியை
நினைத்த படியே போட்டு முடித்தாய்.
நிரந்தரமாகவே உறக்கம் கொண்டன
எம் உறவுகள்!
இருப்பவர்கள் சுமக்கின்றோம்
வடு கொண்ட வலியை
வாய்க்காலில் எங்கள் முள்ளிவாய்காலில்

நன்றி
தமிழ்ப்பாட ஆசிரியை
திருமதி ரஜனி ஜோன்சன்.

மல்லிகைப் பூவே!

என் தாயைச் சுமந்த தேவதையே!
அப்பொழுது என்னையும் சுமந்தாயே!
மல்லிகை நிறத்தை
முடியில் கொண்ட பூமணியே!
அம்மம்மா எங்கே சென்றீர்களோ?
நான் அழைப்பதை உங்கள்
செவிகளால் கேட்க முடிகிறதா?

உங்கள் இதயம் நின்றது என்று கேட்டவுடன்
அனைவருடைய நெஞ்சங்களும் உடைந்தன!
உங்களால் முடியுமென்ற மனத்தைரியத்துடன்
தொண்ணூறு ஆண்டுகள்
பார்வீதியில் ஆட்சி புரிந்தீர்களே!
இனிச் சொர்க்கத்தை ஆள்வதற்கு
என்னை விட்டுப் பிரிந்தீர்களா?

சிறுவயதில் இருந்து என்னைத்
தங்கத்தைப்போல் பக்குவமாய்ப் பார்த்தீர்களே?
எனது தமிழின் ஆதிமூலத்தை,
விதைபோட்டு வளர்த்து "வித்தகன்" என்ற
பட்டத்தைத் தமிழில் கொடுத்தீர்களே!
உங்களுடைய தமிழின் மீது இருக்கும் ஆர்வம்
இனி ஏழேழு ஜென்மங்களுக்கும் தொடரும்!


கற்பனை உலகத்திலிருந்து,
கதைகளும், பாட்டுக்களும் உணவுகளைப்
போலவே பகிர்ந்துகொண்டு மகிழ்ந்தோமே!

உங்கள் பாலகுமாரனைக் காப்பாற்றுவதற்கு
ஈரலைக் கிழித்துத் தருவேன் என்றீர்களே!
உங்களிடம் வந்துவிடவேண்டும்
என்கின்ற என் அச்சு மாமா!
உங்களோடு என் படிப்பு முடிந்தபின்,
வாழ வேண்டும் என்கின்ற என் அம்மா!
நீங்கள் சந்தோஷமாய் வாழவேண்டுமென்று
நினைக்கின்ற சின்ன மாமா!
தன்னுடைய தாயார் விரும்பியபடி,
வாழவேண்டுமென ஆசைப்படும் பெரிய மாமா!

உலகமே அம்மா!
அம்மாவே உலகம்!
என்கின்ற நான்கு சிசுக்களை
அனாதைகளாக விட்டுப் பறந்து சென்றீர்களே!
என்னுடன் "உப்பு உப்பு" என்ற விளையாட்டை
விளையாடுவதற்கு எப்பொழுது மீண்டும்
வருவீர்களோ!
வர மாட்டீர்கள் அல்லவா?
ஆகையால் உங்கள் செவிகளுக்குத்
தங்களின் பேரன் ஆகிய நான்
"சான்றோன்" எனும் பெயரைப் பெறும்வரை
போராடி உங்களைப் பெருமைப்படுத்துவேன்!
அதுவரை காத்திருங்கள் அம்மம்மா
உங்களைப்போல ஒரு பெண்மணி இல்லை
அம்மம்மா! உங்களை அழைத்து விட்டார்
மீண்டும் சந்திப்போம்!
அன்புடன் உங்கள் பேரன்!
ரோசாப்பூ!

செல்வன் மாதவ் கேதீஸ்வரராஜா
தரம் - 8

நான் பார்த்து ரசித்த விளையாட்டுவிழா



கடந்த ஆண்டு கோடை கால விடுமுறையில், தமிழ் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நடை பெற்றது. இது பிறகல் ஒரு மணித்து அவிவதற்புடன் ஆரம்பமாகி, இரவு எட்டுமணிக்கு பரிசளிப்பு விழாவுடன் முடிவுற்றது. நான் அதைப் பார்த்து இரசித்தேன். பல விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. அவையாவை ஓட்டப் போட்டி, பந்து எறிதல் போட்டி, நீளம் பாய்தல் போட்டி, தொடர் ஓட்டம். நான் ஓட்டப் போட்டியிலும், நீளம் பாய்தலிலும் முதலாம் பரிசு பெற்றேன். எனது அம்மா, பரிசை நான் தலைமையாசிரியரிடம் வாங்கும் போது புன்னகை புத்தாள்.

விளையாட்டுப் போட்டிகள் நடை பெறும் போது சில பெற்றோர்கள் சிற்றுண்டிசாலையில் உணவுகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அவையாவன: கூழ், வடை, ரோல்ஸ், மோதகம், அப்பம். அதுடன் சில பெற்றோர்கள் உணவுகளை விற்றுக் கொண்டிருந்தார்கள். நான் ஒரு கலையான முடை அப்பமும், ஒரு கிண்ணம் நண்டுக் கூழும் வாங்கினேன். கூழ் மிகவும் உறைப்பாக இருந்தது. ஆனால் கூழ் மிகவும் ஊறலாக இருந்ததால் தான், அது சுவையாக இருந்தும் என்று எனது அம்மா சொன்னாள். அதை மனதில் வைத்துக் கொண்டு நான் கூழைக் குடித்தேன்.

விளையாட்டுப் போட்டிகள் ஏழு மணித்தியாலங்கள் நடை பெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதும், அதனைப் பார்த்து ரசிக்கவும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

செல்வி சரண்யா வாசுதேவ்.
தரம் - 6

சிறுதுளி பெருவெள்ளம்!

இந்த நெருக்கடியான காலகட்டத்தில், எமது தாயகத்தில் கொரோனாவின் தாக்கத்திற்குட்பட்டிருக்கும் எம்முறவுகளுக்கு உதவும் நோக்கத்தோடு, கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, விரும்பியவர்கள் தங்களால் முடிந்த பணத் தொகையாக £750 கொடுத்துள்ளார்கள். அத்துடன் வெள்ள நிவாரண நிதி £332 யும் சேர்த்து எமது நலன் புரிச் சங்கத்தால் £168 அன்பளிப்பாக மொத்தம் £1250 கிளிநொச்சி மக்கள் நலன் புரிச் சங்கத்தின் (KILI PEOPLE) ஆதரவோடு அனுப்பப்பட்டு, அம்பாறை, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. நிதிப் பங்களிப்பு செய்தவர்களின் விபரம்.


திரு. அரியரட்ணம் குடும்பத்தினர் £200
வைத்தியர் சதானந்தன் குடும்பத்தினர் £250
திரு. சிவநேசன் குடும்பத்தினர் £100
திரு. உதயசேகரன் குடும்பத்தினர் £50
திரு. விஜயரூபன் சேகரித்த நிதி £150
கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் £168


இவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.



கொரோனாவை முற்றாக ஒழிக்கும் வரை மிக அவதானமாக இருப்போம்!





Vithushan. Vijayaratnam

16/3/2020

கொரோனா விழிப்புணர்வு பற்றி உங்கள் பள்ளிக்கூடத்தில் மாணவருக்கு ஒரு நேரம் ஆற்றும் "கோவியுரை"

சமயத்தில் பிரமுகர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனதுடைய பணிவான வணக்கத்தை கூறிக்கொள்கின்றேன். நான் இன்று கொரோனா வைரஸ் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த சொற்பொழிவை ஆற்ற உள்ளேன்.

அண்மையில் "கொரோனா" என்ற ஒரு வைரஸ் சீனா நாட்டில் உருவாகியது. இது பலருடைய இறப்புக்கு காரணமாக பரவியது. சில நாடுகளிற்கு பிறகு உலகெங்கும் பரவி ஒரு சர்வதேச நோயாகியது. இதனை உலகில் வாழ்பவர்களும் பல இடையூறுகளும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. சிறுவர் முதல் முதியோர் வரை இந்த நோயினால் பாதிப்படைகிறார்கள்.

கொரோனா வைரஸ் பாதியால் நோய் ஏற்படும் முன் பல நோய் அறிகுறிகள் மனிதஉடலில் ஏற்படும். அதாவது இருமல், உயர்ந்த வெப்பநிலை, காய்ச்சல், தொண்டை வலி போன்ற நோய் அறிகுறிகளும். அதுமட்டுமல்லாமல் இந்த நோய் கடுமையாக சுவாச அமைப்பை பாதிக்கும். இப்படிப்பட்ட அறிகுறிகள் ஏதாவது இருந்தால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லவேண்டும்.

இந்த ஆபத்தான நோய் வருவதற்கான வாய்ப்பை குறைக்க பல வழிகள் உண்டு. முதலில் நீங்கள் ஒவ்வொரு நாளும் வீட்டில் இருக்க முயற்சி செய்ய வேண்டும். இது செய்தல் மற்றவர்களிடம் இருந்து நோய் பரவாது. மற்றும் ஆரோக்கியமான உணவு உண்ண வேண்டும். முக்கியமாக உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சி செய்தல் உங்களுடைய உடல் உறுப்புகள் சிறப்பாக இயங்கும் மற்றும் சிறந்த சுவாசத்தையும்.

தயவுசெய்து வீட்டில் பாதுகாப்பாக இருங்கள்!!! நீங்கள் பாதுகாப்பாக வீட்டில் இருப்பதனால் பலர் பயனடைவார்கள். முக்கியமாக வைத்தியர்களும் தாதிகளும் நமக்காக அவர்களுடைய வேலை செய்யும் நேரத்தை குறைத்து அவர்களுடைய குடும்பத்தினரையும் பிரமாக்கவும். நான் கூறியவற்றை கருத்தில் கொண்டு நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள் என நம்பிக்கையுடன் எனதுடைய சொற்பொழிவை நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம்.

செல்வன் விசாகன் விஜயரட்ணம்
தரம் – 9